When only
The best is
Good Enough

Buy
Solide Pumps

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

டக 5ர்: சுக்கில ஷூ பங்குனி மீ 13 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 28 (26-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 43

## திருமலையில் வழியனுப்பு நிகழ்ச்சி



நேற்று முன்தினம் இந்திய அமைதிப்படையை திருகோணமலை துறைமுகத்தில் வைத்து வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, இலங்கைக்கான இந்தியத்தூதர் திரு. எல். எல். மெஹ்ரோத்ரா மற்றும் இலங்கைப் பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகள் வழிஅனுப்பி வைத்தபோது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.

### கசப்பான பாடம்

கொழும்பு, மார்ச். 26

இலங்கையில் இருந்து வெளியேறிய அமைதிப் படையின் இறுதி வீரர்கள் ஒன்பதாவது பரா கமாண்டோ பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இப்பிரிவின் தலைவரான லெப்டினன்ட் கேர்னல் ஹர்தேவ் லிடர், கப்பலில் ஏறும் முன்னர் சொன்னதாவது:-

இலங்கையில் இந்திய இராணுவம் கசப்பான பாடம் ஒன்றை படித்துள்ளது. இது போன்ற சம்பவம் மீண்டும் எனது நாட்டுக்கு வருங்காலத்தில் ஏற்படாது என்று நம்புகின்றேன்''—இப்படி அவர் சொன்னார்.

### சுப நேரம்

26-3-1990

திங்கட்கிழமை பங்குனி 13

சுபநேரம்:

12-15முதல்01-45 வரை

இராகுகாலம்

7-45முதல் 09-15 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

# அரசு - புலிகள் அடுத்த வாரத்தில் மிக முக்கிய பேச்சு!

## மாகாணசபைத் தேர்தல் திகதியும் நிர்ணயிக்கப்படும் எனத் தகவல்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மிக முக்கிய பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

இந்தப் பேச்சுக்களின் போது உத்தேச மாகாணசபைத் தேர்தலை நடத்தும் திகதிபற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உயர் தலைவர் ஒருவர் நேற்று இத்தகவலை உதயனுக்கு வெளியிட்டார்.

இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் அடுத்த வாரம் கொழும்பு செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச தரப்பில் முக்கியமான பிரமுகர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டது குறித்தும், ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று விடுத்த பிரகடனம் குறித்தும் அப்பிரமுகரிடம் கேட்டபோது—

''அது எதிர்பார்க்கப்பட்ட

(5ஆம் பக்கம் பார்க்க)

# ★ வடக்கு, கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தை ஜனாதிபதி பொறுப்பேற்றார்

## ஆளுநருக்கு விசேட அதிகாரம்

### புதிய பிரதம செயலாளர் நியமனம்

கொழும்பு, மார்ச். 26

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை ஜனாதிபதி பொறுப்பேற்கும் வகையில் பிரகடனம் ஒன்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவினால் விடுக்கப்பட்டது.

இந்தப் பிரகடனத்தின்படி ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணசபையின் புதிய பிரதம செயலாளராக திரு. சொர்ணலிங்கம் கணேசநாதனை ஜனாதிபதி நியமித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களில் பெரும்பாலானோரும், முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளும் நாட்டை விட்டு வெளியேறியதை அடுத்து மாகாணசபை நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைந்தது தெரிந்ததே.

அதனை அடுத்து சபை நிர்வாகத்தைச் சீர் செய்யும் வகையில் ஜனாதிபதி நேற்று பிரகடனம் ஒன்றை விடுத்தார்.

ஏற்கனவே பிரதம செயலாளராக இருக்கும் திரு வேலுப்பிள்ளை நடராசா சிவராசாவை அகற்றி, அவரின் இடத்துக்கு திரு. கணேசநாதனை நியமிக்கும் உத்தரவை ஜனாதிபதி அரசியல் யாப்பின் 154 (பி) ஷரத்தின் பிரகாரம் பிறப்பித்தார்.

1987 ஆம் ஆண்டு மாகாண சபைகள் 42ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை: வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்பிரயோகிப்பதற்கான உத்தரவையும் ஜனாதிபதி நேற்றுப் பிறப்பித்தார்.

புதிய உத்தரவின் கீழ் அதி

(5ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



ஜனாதிபதி நிர்வாகத்தை பொறுப்பேற்றது இருக்கட்டும், விரைவிலை அந்தப் பொறுப்பு தமிழ்மக்கள்கைக்கு வரவேணும் பாருங்கோ. . . !

## இந்தியப் படை விலகியதற்கு வடமராட்சியில் கொண்டாட்டம்

### ராஜீவ், வரதர் கொடும்பாவிகளும் எரிப்பு!

வல்வெட்டித்துறை, மார்ச் 26

இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து வெளியேறியதை வடமராட்சியின் பல பகுதி மக்களும் நேற்று மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

இதனையொட்டி வடமராட்சியின் பல பகுதிகளிலும் அவ்வப் பகுதி மக்கள் பல கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

வல்வை பிரதேச மக்களால் அன்னதானமும் வழங்கப்பட்டது.

இதேவேளை முன்னைய இந்திய அரசின் தவறான நடவடிக்கைகளை கண்டிக்கும் பொருட்டு ராஜீவ்காந்தியினதும், மற்றும் மாகாண முதல்வர் வரதராஜப்பெருமாளினதும் கொடும்பாவிகள் வல்வெட்டித்துறையிலும் நெல்லியடியிலும் எரிக்கப்பட்டன.

நேற்றுக் காலைமுதல் இரு கொடும்பாவிகளும் வல்வை சந்தியில் தொங்கவிடப் பட்

(5ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைகள்: விரைவில் தேர்தல்

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சி சபைகள் அனைத்துக்கும் விரைவில் தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநரகசபைகள், நகர சபைகள், பிரதேசசபைகள் ஆகியவற்றுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.

தேவையான சட்ட விதிகளைப் பின்பற்றுவதற்காக

(5ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படைக்கு இங்கு ஏற்பட்ட இழப்புகள்!

கொழும்பு, மார்ச். 26

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடந்த 32 மாதகால நடவடிக்கைகளின் போது இந்திய அமைதிப் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் பற்றிய விபரங்களை அமைதிப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் வெளியிட்டார்.

விவரம் வருமாறு—

உயிரிழந்தவர்கள்: 1,155

காயமடைந்தவர்கள்: 2,987

காணாமற் போனவர் என்று உறுதி செய்யப்பட்டவர்; 01.

காணாமற் போனவர்கள் என்று நம்பப்படுபவர்கள்: 03.

## மரம் முறிந்து விழுந்து பெண் பலி; இருவர் காயம்


யாழ்ப்பாணம், மார்ச் 26

சாவகச்சேரி நீதிமன்ற வளவில் நின்ற பழமையான பாரிய மரம் ஒன்று நேற்று முன்தினம் திடீரென முறிந்து விழுந்ததில் அதற்குள் அகப்பட்டு இளம்பெண் ஒருவர் மரணமானார். மற்றிருவர் படுகாயமுற்றனர்.

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த பீ. தயாளினி (வயது 25) என்பவரே இறந்தவர் ஆவார். வீ. செபமாலை (வயது 45), வே. ராசா (வயது 30) ஆகியோர் படுகாயமுற்றனர்.

இச்சம்பவத்தில் மரத்துக்குக் கீழ் நிறுத்தப்பட்டிருந்த மூன்று சைக்கிள்களும் பலத்த சேதமுற்றன. (உ-6-7-117)

## வவுனியாவில் வரவேற்பு நிகழ்ச்சி



வவுனியா மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, முன்னணிப் பிரமுகர்கள் திரு. சுரேஷ், திரு. லோறன்ஸ் ஆகியோர் வந்தபோது அவர்கள் வரவேற்கப்படுவதையும், கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

(படம் :— வவுனியா மாவட்ட செய்தியாளர்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலாலி வீதி கந்தர்மடத்தில் வீடு கட்ட உகந்த காணி நல்ல தண்ணீர் வசதியுடன் 3பரப்பு உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். த. குமாரசாமி 272, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3029)

துண்டுகளாக்கப்பட்டவேப்ப மரங்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 16/2 சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (3027)

O/L, A/L அனைத்துபாடங்களுக்கான Tutes மலிவு விலையில் (Clearence Sale) 21-3-90 முதல் 5-4-90 வரை விற்கப்படும் Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4121)

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் நாலு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு திருமதி G. மயில்வாகனம் 441, கோவில் வீதி, நல்லூர். (12212)

### கோழிக்குஞ்சு விநியோகம்

(புலிமத்) கறுப்புச் சேவற் குஞ்சுகள் 27/3/90 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (3025)

ஒரு நாள் Golden Como பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline, வெள்ளை, பிறவுண், கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், Hisey பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2881)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(Unsexed) தனி சிகப்பு கறுப்பு சேவல் (பிலிமத்) கறுப்பு (வரி)சேவல் (Lohman) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் [28-3-1990] புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (12098)

### நாடக நூல்

O/L தமிழ்மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டே இரண்டு நூல்கள் கெட்டிக்காரர்கள் ரூபா 25/- முதலாம்பிள்ளை ரூபா 30/- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை (12082)

### தேவை

வெல்டிங் கேட் வேலை செய்யக் கூடியவர்கள்தேவை. உடன் வரவும். நியூ டீசன்ஸ் கேட்ஸ் வேக்ஸ், 23, பிள்ளையார் கோவில் லேன், முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (3014)

### தொழில் பங்காளர் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழுநேர பங்காளர் தேவை. விபரங்களுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும் 658, C/o உதயன் (3019)

### சோதிட மாந்திரிக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆருடமாந்திரீகமுறைப்படிஅரசஅங்கீகாரம்பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரிமைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (3022)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### தவறிவிட்டது

தங்கக்கைச்செயின் தவறிவிட்டது. Bala என பெயரும் பதிக்கப்பட்டுள்ளது இதனைக் கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் அத்துடன் உங்கள் விலாசத்தையும் கொடுக்கவும் இதற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12129)

### தவறிவிட்டன

24.03.1990 காலை 8.30-12.30 இற்கும் இடையில் யாழ். போதனா வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவில் 3 பவுண் தங்கச் சங்கிலியும் அடையாள அட்டையும் பணமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆறுமுகம் அன்னமுத்து, அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோவிலடி. (3030)

### வாடகைக்கு

சிங்கப்பூர் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செட், எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ராசி சில்க்ஸ் 70, நியு மார்க்கட், யாழ்ப்பாணம். (சி/4129)

## நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம், மார்ச் 26 பாப்பரசரின் பிரதிநிதி அதி வண. மாண்புமிகு பிரான்சுவா பக்கே அவர்களின் வருகையை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு யாழ். ஆசனக்கோவிலின் முன்றலில் திருமறைக் கலாமன்றத்தின் ''இரத்தக் கடன்'' என்னும் நாட்டுக் கூத்து நடைபெறும்

இந்நாட்டுக் கூத்தை திரு பேக்மன் ஜெயராஜ் நெறிப்படுத்தியுள்ளார். அத்துடன் சொற்பொழிவுகளும் இடம் பெறும். (இ 7)

## அன்னை ஸ்ரீசாரதாதேவி புலமைப் பரிசில்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கொம்பியூட்டர் பயிற்சி பெற செல்வி இந்துமதி தெய்வநாயகத்திற்கு 3000 ரூபா பெறுமதி வாய்ந்த அன்னை ஸ்ரீசாரதா தேவி புலமைப் பரிசில் வழங்கியுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஆரம்பிக்க இருக்கும் கொம்பியூட்டர் பயிற்சி வகுப்பை இவர் பொறுப்பேற்று நடத்தவுள்ளார்.

இவ்வகுப்புகளில் சேவாச்சிரமத்துடன் பல ஆண்டுகள் தொடர்புள்ள திறமை சாலிகள் அளிக்கும் பயிற்சியைக் குறைந்த கட்டணத்தில் பெற வாய்ப்புண்டு என அறிவிக்கப்படுகிறது. (ச)

## உடன் தேவை

யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தனியார் வைத்தியசாலையொன்றிற்கு பயிற்சிபெற்ற, பயிற்சி பெறவிரும்பும் பெண் தாதிகள் (Female-Nurses) உடனடியாக தேவைப்படுகின்றனர். முழு விபரங்களுடன் 31-03-90க்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆங்கிலம் எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருத்தல் அவசியம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**தாதிகள் ஆட்சேர்ப்பு,**
**புதிய உயர் கல்லூரி,**
**ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

[சி-4147]

## 3ஆம் மாத கண்ணீர் அஞ்சலி



**செல்வி கைலேஸ்வரி கந்தையா**
[பேபி]
சண்டிலிப்பாய்
(நியூ சித்திர கலா ஸ்ருடியோ சுன்னாகம்)

அவதரிப்பு: 30 - 01 - 1958
அரக்கனின் அநியாய அழிப்பு: 15 - 01 - 1990

தாரணியில் வந்துதித்த நிலவே
தாயின் மடியில் தவழ்ந்து மகிழ்ந்ததிலே
மருந்தும் வைத்தியமும் இல்லாமல் தூக்கித்
தோளில் சுமந்த சுகத்தை
மறக்க முடியாமல் ஆக்கிவிட்டு
எம்மைவிட்டு அவசரமாக
அஸ்தமித்துப் போனாயோ?
எம்மால் அழ முடியவில்லையம்மா
இது கண்ணீருக்கு அப்பாற்பட்ட ஆழமான சோகம்
உன்னை எம் இதயத்தில்
பச்சைகுத்திக் கொண்டோம்
நீ இல்லை என்பதை எம்மால்
ஏற்றுக் கொள்ள முடியவில்லை

இதைக் கவிதையாலோ, காவியத்தாலோ, கற்பனையிலும் கூட ஆற முடியவில்லை உன் நினைவுகள் மட்டும் எம்மைச் சொந்தமாக்கி எப்போதும் உன் திருவடிக்கே இன்பமலர் காத்துநிற்போம்,

சாந்தி......... சாந்தி......... சாந்தி.........

27-03-90 செவ்வாய்க்கிழமை எமது வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாபேரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
**தகப்பன்,**
**சகோதரி, சகோதரன்,**
**மச்சான்.**

''ஈஸ்வரிவாசா''
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். [12132]

## நவீல்ட் மாணவன் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 26 யாழ். கல்விமாவட்ட மெய்வல்லுனர்ப் போட்டியில் கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் சே. சதீஸ்குமார். 19 வயதுக்கு உட்பட்ட பிரிவுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தையும் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளார். (இ)

## International Association to Bock-Keepers (London)

December — 1990 Exam
INTERMEDIATE
FINAL
Weekend Classes

★ ஆரம்பம்: 31 — 03 — 1990 ★

குறிப்பு:- கடந்தகால பரீட்சைகளில் எமது மாணவர்கள் பலர் விஷேஷ சித்தி பெற்றிருக்கிறார்கள்.

CIMA, Computer, Shorthand & Typing வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd Cross St., Jaffna.

[சி-4150]

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

**கரடிப்போக்கு கிளிநொச்சி**
பதிவு இல:- 12782

**பல்கலைக் கழக**
**வெளிவாரிப் பட்டப் படிப்புகள்**
**கல்வி ஆண்டு 1990 / 91**
**கலைமாணி முதற் தேர்வு**
**[G. A. Q]**

க. பொ. த. உயர்தர சித்தியுடன் பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றவர்கள், அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், அண்மையில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி மூன்று பாடங்கள் சித்தியெய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சிறந்த நூலக வசதி

இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்

சிறந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

இத்தனை வசதிகளுடனும்

**விரிவுரைகள் ஆரம்பம்:- 07 - 04 - 1990**
**சனிக்கிழமை நண்பகல் 12 மணி**

★ பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும்.

★ பதிவுகளுக்குரிய விண்ணப்பப் படிவம் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து பெறவேண்டியிருப்பதால் உடன் பெயர்களைப் பதிவு செய்யுங்கள்.

விபரங்கட்கு
நிர்வாகி

[12084]

## உடன் தேவை-நேரில் வரவும்

**1. பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆட்கள் உடன் தேவை**

மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மட்டும் நேரில் வரவும்.

முன் அனுபவம் உடையவர்களுக்கும், யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை தரப்படும்.

கல்வித் தகமை, தொழில் அத்தாட்சிப் பத்திரங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பி. ப. 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

**2. பத்திரிகை மடிப்பதற்கு ஆட்கள் தேவை**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களும், முன் அனுபவம் உடையவர்களும் விரும்பப்படுவர்.

அத்தாட்சிப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களுடன் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பி. ப. 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும்

முகாமையாளர் (ஆளணி)
**நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**மரியம்மா பெனடிற்**

தோற்றம்: 13 - 03 - 1912
மறைவு: 25 - 02 - 1990

அவரின் ஆன்ம சாந்திக்காக யாழ் அடைக்கல மாதா கோவிலில் 27-03-90 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

124, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம் [12216]

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



மண்ணுலகம் 1912 - 02 - 19
விண்ணுலகம் 1990 - 03 - 06

அமரர்
**சுப்பிரமணியம் அம்பலவாணர்.**

6.3.90 அன்று இறைவனடியெய்திய எமது தந்தையின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி தெரிவித்தோர்க்கும் மேலும் பல விதத்தில் உதவிகள் பல புரிந்தோர்க்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

அன்னாரின் சபிண்டீகரணம் 26.3.90 திங்கட்கிழமையன்று இடம்பெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,
அ. திருஞானசம்பந்தர்
அ. பரிமளம்
அ. நளாயினி
[மக்கள்]

193/3 பிறவுண் வீதி
யாழ்ப்பாணம். (2960)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்**

தோற்றம்: 18 - 06 - 1925
மறைவு: 25 02 - 1990

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும், வளர்த்து நல்வழிகாட்டி வாழ வைத்து இமைப்பொழுதில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!... தாங்கள் எங்களை விட்டு பிரிந்து ஒரு மாத காலமானாலும் உங்கள் பசுமையான நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இன்று 26-03-1990 திங்கட்கிழமை அஸ்தி சங்கமம் கீரிமலை புண்ணிய தீர்த்தத்திலும், 27-03-1990 நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
— **பிள்ளைகள்**

24, வைமன் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [12134]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

**பொருள்:**

போர்க்களத்தில் பகைவரும் அஞ்சுதற்குக் காரணமான என் வலிமை, இவளுடைய ஒளி பொருந்திய நெற்றிக்குத் தோற்று அழிந்ததே!


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
26-03-1990 த. பெ. இலக்கம் : 23


# கதவுகளை மூடுவதற்கு காரணம் என்ன?

அரசாங்க சேவையில் புதிய நியமனங்கள், பதவி உயர்வுகள், தற்காலிக வேலையில் உள்ளவர்களை நிரந்தரமாக்குதல் ஆகியன இடைநிறுத்தப்பட்டுள்ளன. கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது சம்பந்தமான முடிவு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடைநிறுத்தம் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கலாம் என்ற ஒரு கருத்தும், வதந்தியும் பரவி வருகின்றன. இடைநிறுத்தம் சம்பந்தமாக ஒரு காலவரையறையை அரசு திட்டவட்டமாக அறிவிக்காததே அந்த வதந்திக்குக் காரணமாகும்.

அரச நியமனங்கள், பதவி உயர்வுகளை இடைநிறுத்தி வைப்பதற்கு உரிய காரணமோ, தகுந்த காரணமோ அரசினால் வெளியிடப்படவில்லை. அதுவும் மக்கள் மனதில் பலவித சந்தேகங்களையும், தேவையற்ற ஊகங்களையும் உருவாக்கி வருகிறது.

சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தை வற்புறுத்தியது. அந்த வற்புறுத்தலை நிறைவேற்றவே, நியமனங்கள் இடைநிறுத்தத்தைச் செயற்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது என்றும் ஒரு காரணம் கூறப்படுகிறது. இது தான் உண்மையான காரணமா, சரியான பின்னணியா என்பதை அரசு இன்னும் தெளிவாக்கவில்லை. அரசு உள்ளதைச் சொல்லும் வரை, உண்மையை வெளிப்படுத்தும் வரை அதன்மீது தப்பான அபிப்பிராயம் கொள்ளும் விதத்தில் பலரும் பலவித காரணங்களைக் கற்பித்துக் கொண்டிருப்பார்கள்.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்ற காரணங்களும் பரப்பப்பட்டு நல்ல சூழ்நிலைகளைக் குழப்பி விடவும் கூடும்.

கொழும்பில் உள்ள பி.பி.சி. பிரதிநிதி கற்பித்த காரணம் அப்படி ஓர் அச்சநிலையை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி இருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் நியமனங்களை நிறுத்தும் மூல நோக்கத்துடனேயே நியமனங்களை இடைநிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டது. அதனால் பிரஸ்தாப சபையின் நிர்வாகச் செயற்பாடுகளைக் குறைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. இது விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பிணக்கை உருவாக்கும் முதல் முயற்சி; மறைமுகச் செயற்பாடு.

இவ்வாறான கருத்தை வானொலி நேயர்கள் மனதில் உருவாக்கும் விதத்தில் பி.பி.சி. அரச நியமனங்கள் இடைநிறுத்தத்துக்கும் காரணம் கற்பித்துள்ளது. இந்தியப்படை விலகியதும் அரசு-புலிகள் உறவு குலையலாம் என்று பரவலாக, பொதுவாக ஏற்பட்டிருக்கும் அச்சத்தை மேலும் வலுப்படுத்துவதாக பி.பி.சி. தொட்டுக் காட்டும் காரணம் அமைந்துள்ளது. இது அரசுக்குப் பெரும் பாதகமான சூழ்நிலையை நெருக்கடியைத் தோற்றுவிக்கும்.

ஆகையால், அரசாங்க நியமனங்கள் பதவி உயர்வுகளை இடைநிறுத்த முடிவு செய்ததற்கு உண்மையான காரணம் என்ன? அதனை எத்தனை காலத்திற்கு அமுல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? என்பன குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தால் மக்கள் கஷ்டமுறும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. பொருளாதார மேம்பாட்டுக்கு உகந்த விதத்தில் வேலை வாய்ப்பைப் பெருக்குவது, அதற்கான சாத்திய சாதகமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவது அரசின் பிரதான கடமை. நாட்டில் மலிந்து வரும் அரசியல், சமூகப் பிரச்சினைகளுக்கு மூலவேராக ஒழுவதும் வேலையில்லாப் பிரச்சினையே; பொருளாதாரக் கீழிறக்க நிலையே.

இதனை உணராமல் செயற்பட நினைத்தால் பல பாதகமான நேரடி விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

வேலைவாய்ப்பு என்பது அரசாங்க நியமனங்கள் மட்டும் தான் என்று நாம் கூறவரவில்லை. தேவையற்ற பதவிகளை உருவாக்குதல், அரசியல் செல்வாக்கைப் பெருக்குவதற்காக அளவுக்கு அதிகமாக அரச பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்தல், ஒருவர் இருக்க வேண்டிய இடத்துக்கு ஒன்பது பேர்களை நியமித்து, மக்கள் வரிப் பணத்தை வீணாக்குவதோடு, மிகுதி எட்டுப் பேரையும் சோம்பேறிகள் ஆக்குதல் போன்றவை இடையாக, தற்காலிகமாக அன்றி நிரந்தரமாக முற்றுமுழுதாக நிறுத்தப்பட வேண்டியவை.

ஆனால் உள்நோக்கம் ஒன்றுடனோ அல்லது நிர்ப்பந்தம் தாங்காமலோ அரச வேலை வாய்ப்புக் கதவுகளை மூடுவது கண்டிக்கப்பட வேண்டியது; ஏற்க முடியாதது. இது விடயத்தில் அரசு விடயத்தை உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

## சமய சந்நிதிகளில்

### மானி. மருதடி விநாயகர் உற்சவம்

மானிப்பாய் மார்ச் 26

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகின்றது. அன்று பகல் 11 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு பஞ்சத்திருவிழாவும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 14 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறும். 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 30 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும்.

உற்சவ கிரியைகளை தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ. சோ. சந்திரகாந்தக்குருக்கள் நடாத்தி வைப்பார். (க-90)

### இலட்சார்ச்சனை

சுழிபுரம் மார்ச் 26

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனை 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் காலை, நண்பகல், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் அபிஷேகம், பூசை, அர்ச்சனை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். தினமும் இலட்சார்ச்சனை முடிவில் யாவரும் ஒன்று சேர்ந்து சந்தரநுபூதி பாடி முடிவு செய்வார்கள். நிலையக்குரல் ஆதரவில் சந்தரநுபூதி மனனப் போட்டியும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-18)

# வ. பி. போ. ச. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி!

யாழ்ப்பாணம் மார்ச் 26

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் ஏழு டிப்போக்களிலும் நிலவும் பிரச்சனைகள் குறித்து சபையின் இணைப்புக் குழு எதிர்வரும் 29 ஆம் திகதி மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. விக்ரர் ரூபசிங்காவுடன் பேச்சு நடாத்த இருக்கிறது.

பஸ் பற்றாக்குறை, உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை, உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த இணைப்புக் குழு பேச்சு நடாத்தும்.

ஐவர் இந்த இணைப்புக்குழுவில் இடம் பெறுவர் (இ-3)

### கொள்ளை

கோவில் குளம் பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான இரவுக் கொள்ளைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில வேளைகளில் விடுதலை புலிகளினது பெயரைச்சாட்டியும் இக்கொள்ளைக்காரர்கள் வீட்டு உரிமையாளர்களை மிரட்டி கொள்ளையில் ஈடுபடுவதாகவும் —

—மூவர் அடங்கிய ஒரு கோஷ்டியே பிஸ்டலை சில சமயங்களில் காட்டி பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நியமனம் மட்டுமே இதுவரை; பொறுப்புகள் ஒப்படைப்பு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்மாவட்ட சுங்கம்,குடிவரவுப்பிரிவுக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாக யாழ்-பொலீஸ் அதிபர் திரு. ரி. ஜே ஜெயராஜன் கடந்த ஆறு மாத காலத்துக்கு முன் நியமிக்கப்பட்ட போதிலும் இதுவரை இவை சம்பந்தப்பட்ட எந்த வேலைகளும் அவருக்கு வழங்கப்படவில்லை.

இத்தகவலை அவரே தெரிவித்தார்.

இது சம்பந்தமாக தகவல் சாதனங்கள் மூலம் அறிவிக்கப்பட்டதே தவிர தமக்கு எதுவித கடிதமும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## ஊற்று அறிவியல் ஏடு

யாழ்ப்பாணம், மார்ச் 26

அறிவியல் சஞ்சிகையான ''ஊற்று'' ஏட்டை மீண்டும் வெளியிட முயற்சி எடுக்கப்படுகிறது.

இச்சஞ்சிகையில் வெளியிட அறிவியற் துறைக் கட்டுரைகளை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அனுப்பி வைக்குமாறு ஆராய்ச்சியாளர்களையும் அறிவியலாளர்களையும் ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்ளும் வேண்டுகோள் ஒன்றை ஊற்று நிறுவனத்தினர் அனுப்பியுள்ளனர்.

### மதுவிற்பனை

சாவகச்சேரி. மார்ச் 26

தென்மராட்சியில் சட்டவிரோத மதுவிற்பனை தடை செய்யப்பட்டிருப்பதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

## கிளிநொச்சியில் அடகு நகைகள் மீளளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில்நகை அடகு வைத்து 1989 - 9 - 26 - ஆம் திகதிக்கு முன் பணம் செலுத்தியவர்களுக்கான நகைகள் இம்மாதம் இறுதிக்குள் வழங்கப்படும்.

பிராந்திய அலுவலகம் இந்த தகவலை தெரிவித்ததாக வங்கி முகாமையாளர் திரு எஸ் சுப்பிரமணியம் தெரிவித்தார். (இ-76)

## தும்புத் தொழில் செய்ய 25 பேருக்குக் கடன்

யாழ்ப்பாணம் மார்ச் 26

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் தும்புத்தொழில் செய்து வரும் கொழும்புத்துறையைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு மக்கள் வங்கி கடன் வழங்கவிருக்கிறது.

இந்தக் கடன் உதவி மூலம் அக்குடும்பங்கள் சுயதொழில் வாய்ப்பைப் பெற முடியும்.

இதே போன்று பொம்மைவெளி, செம்மாதெரு பகுதியை சேர்ந்தவர்களுக்கு சிறு வியாபாரம் ஆரம்பிக்க கடன் வழங்க மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

### நினைவில் இன்று

26 03-90

- ந. கதிரவேற்பிள்ளை நினைவு தினம்.
- வங்காள தேச தேசிய தினம்.

## ரயிலுக்கு ஆசனப் பதிவு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் - கொழும்பு ரயிலில் பயணம் செய்வதற்காக முன் கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்தல் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கமே அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்யும் வசதி இன்று 26 ஆம் திகதி தொடக்கம் செயலுக்கு வரும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது அது ஏப்ரல் முதலாம் திகதி வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

அதுவரை யாழ் ரயில் நிலையத்தில் வழமை போல அன்றன்றே பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ 5)

## தேசிய சரண்புகும் கமிட்டி

கொழும்பு, மார்ச். 26

தேசிய சரண்புகும் கமிட்டி விரைவில் அமைக்கப்படும். அதனைத் தொடர்ந்து சகல இராணுவ நடவடிக்கைகளையும் அரசாங்கம் இடைநிறுத்தம் செய்யும்.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்னா முன்கண்ட தகவலை நாடாளுமன்றத்தில் சென்ற வியாழன் வெளியிட்டார்.

அவசர காலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான 11மணி விவாதத்தை முடித்து வைத்து பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

### கருத்தரங்கு

வளர்ந்துவரும் சுகாதாரப் பிரச்சனைகள் சம்பந்தமாக மாநகராட்சிமன்ற உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு ஒன்று 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. பகல் 8. 30 தொடக்கம் பி. ப. 4 மணி வரை நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி கருத்தரங்கில் யாழ் மாநகரசபையின் உத்தியோகத்தர்களுக்குமருத்துவப்பரிசோதனையும் செய்யப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய்களுக்கான சுகாதார வைத்திய அதிகாரிகள் மேற்படி வைபவத்தில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவிருக்கிறார்கள். (க)

## வெளியேறிய மக்கள் தம் இடங்களுக்கு திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

அமைதிப்படை வெளியேற்றத்தை அடுத்து பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் தம் இடங்களுக்குத் திரும்புகிறார்கள்.

விமான நிலையத்துக்குத் தெற்குப் பகுதியில் இருந்து வெளியேறிய 125 குடும்பங்கள் மீளவும் தம் இடங்களுக்குத் திரும்பிய போதிலும் வீடுகளை அமைக்க முடியாத நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் பற்றைகளை வெட்டும் வேலைகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

மற்றைய பகுதிகளில் இருந்து வெளியேறியவர்களும் தம் வீடுகளுக்கு தற்போது திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். (இ-3)

### மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் காயம்

யாழ்ப்பாணம் மார்ச் 26

பலாலி பழம் றோட் சந்தியில் சனிக்கிழமை காலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த க. ஜெயக்குமாரன் (வயது 39) சுந்தர் மடத்தைச் சேர்ந்த வ. யோகீஸ்வரநாதன் (வயது 50) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-ரி)

### உடுவில் மகளிரில் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

உடுவில்- கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான தொழில் தூண்டல் பயிற்சி வகுப்பு இன்று 26 ஆம் திகதி யாழ். உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

முன்னர் அறிவித்த பிரகாரம் யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறமாட்டாது. யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் இவ்வாறு அறிவிக்கிறார். (க)

### கட்டட வேலை

வேலணை மார்ச் 26

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் புதிய மாடிக் கட்டட வேலைகள் மிக துரிதமாக நடைபெற்று வருகின்றன. (இ-167)

## வாசகர் திருமுகம்

### இரவு ராணிகள்

நாரந்தனையின் தம்பிரான் தோட்டப் பகுதிகளிலும் சுற்றியுள்ள இடங்களிலும் இரவு ராணிகளின் தொல்லை அதிகரிக்கிறது. இதை இல்லாதொழிப்பதற்கு சமூக நலன் விரும்பிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒரு நாரந்தனைவாசி.

### புத்தாண்டு மங்கை

எதிர்வரும் தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் அழகும் தமிழ்பண்பாடும் நிறைந்த மங்கை ஒருவரை 'புத்தாண்டு மங்கையாக தெரிவு செய்வதாக யாழ். அரச செயலகத்தினால் முடிவு செய்யப்பட்டுள்ள செய்தியை பத்திரிகை வாயிலாக அறிந்து மனவேதனை அடைகின்றோம்.

இந்த முடிவு சமூக அடிமைத்தனமான பெண் அடிமைத்தனத்தை அதாவது பெண்ணைப் பொருளாகவும் காட்சிப் பொருளாகவும் அலங்கரித்து அழகுபார்க்கும் போகப் பொருளாகவும் நினைக்கும் பிற்போக்குச் சிந்தனையின் அப்பட்டமான வெளிப்பாடு என்றே எண்ணத் தோன்றுகிறது.

தமிழ் பண்பாடு என்று சாயம் பூசிக்கொண்டு சமூக ஒடுக்குமுறைக்கு மேலும் மேலும் களம் அமைத்துக் கொடாமல் உயர்மட்டத்திலுள்ளவர்கள் தமது சிந்தனைப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ் பிரதேசத்திலுள்ள சகல பெண்கள் அமைப்புகளும் ''புத்தாண்டு மங்கை தெரிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

''தணல்வாசு''
நெடுந்தீவு

### புத்து வெட்டுவான் பஸ் சேவை

கிளிநொச்சியிலிருந்து புத்துவெட்டுவான் கிராமம் 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது அத்தியாவசிய தேவைகளுக்காக இக்கிராம மக்கள் கிளிநொச்சி நகருக்கு செல்ல வேண்டியுள்ளது.

கல்வி கற்பதற்கு மாணவர்கள் நகருக்கு செல்ல வேண்டியுள்ளது.

இந்திய இராணுவம் வருவதற்கு முன்பு ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் பஸ் சேவை நடத்தப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பழைய படி மக்களின் நன்மை கருதி தினமும் மூன்று தடவைகள் பஸ் சேவையை நடத்த ஆவன செய்வார்களா?

என். எஸ். வி.
வைத்திலிங்கம்.
புத்துவெட்டுவான்

## கண்டதும் கேட்டதும்

கொழும்பில் இருந்து ரயிலில் வந்து கொண்டிருந்தபோது ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் ஓர் ஆசிரியர். ஊரெழுவைச் சேர்ந்தவர்.

தமது தமிழ் நாட்டுச் சுற்றுப்பயணம் பற்றி அவர் அப்போது கூறிக்கொண்டிருந்தார். மதுரையில் நடைபெற்ற இலக்கிய விழா ஒன்று பற்றியும் அவர் பிரஸ்தாபித்தார்.

அந்த இலக்கிய விழாவில் திருவள்ளுவர் இளங்கோ, கம்பர், சேக்கிழார் வேஷங்களில் தோன்றிய அத்தனைபேரும் இத்துறைகளில் படித்துப் பட்டம் பெற்ற ஆராய்ச்சியாளர்கள். (உதாரணமாக திருவள்ளுவராக வந்தவர் திருக்குறள் ஆய்வாளர் முனுசாமி) அந்த இலக்கிய விழாவில் மக்களின் சந்தேகங்களுக்கு அவர்கள் விடை அளித்தனர்.

இலங்கையிலும் தமிழ் அறிஞர்கள் என்று கூறப்படும் பலர் இருக்கிறார்கள். அவர்களில் பலர் சபைக்கு வருவதில்லை. சபைக்கு வருவதற்கு வெட்கப்படுகிறார்கள். நுனிப்புல் மேய்வது தான் அந்த வெட்கத்துக்கு காரணமாக இருக்குமோ என்று அந்த ஆசிரியர் கேள்விக்குறி போட்டார்!

அமைதியான சூழ்நிலை இன்று நாட்டில் ஏற்பட்டு வருகிறது. பௌர்ணமி கலை விழாக்கள் போன்ற கலை விழாக்களை இனி நடத்த முடியும். அப்போது வள்ளுவர், இளங்கோ சேக்கிழார், கம்பர் ஆகியோர் வந்து எமது சந்தேகங்களை தீர்ப்பார்களா?

— செய்திலோலன்

## யாழ். மாவட்டத்தில்

# ஜனவரியிலிருந்து இதுவரை 28 வீதி விபத்துக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

''ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் பிற்பகுதி வரை யாழ்மாவட்டத்தில் 28 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

யாழ் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

கடந்த 18 ஆம் திகதிக்கு பின் எந்தவிதமான விபத்துக்களும் பற்றி அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மொத்தமாக இடம்பெற்ற 28 விபத்துக்களிலும் ஜனவரி மாதம் இருவரும், பெப்ரவரி மாதம் மூவரும், மார்ச்மாதம் நான்குபேரும் கொல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவித்தன. (இ-3)

# கிராம சேவை அலுவலருக்கும் கஷ்டப் பிரதேச அலவன்ஸ்

## கிழக்கிலங்கை கிராம சேவை அலுவலர் மாநாட்டில் தீர்மானம்

மட்டக்களப்பு, மார்ச் 26

கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச அலவன்ஸ் வழங்கப்படுவது போன்று கஷ்டபிரதேச கிராம சேவை அலுவலர்களுக்கும் கஷ்டப்பிரதேசஅலவன் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் அண்மையில் [illegible] சார்ள்ஸ் மண்டபத்தில்நடந்த கிழக்இலங்கை [illegible] அலுவலகர் வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

ஏனைய சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு

★கச்சேரியில் கிராம சேவை அலுவலர்களுக்கான தனியான நிர்வாக பகுதி இருக்க வேண்டும்.

★ சைக்கிள் அலவன்ஸ் [illegible] பட வேண்டும்.

★ [illegible] பணம் நகர்- 300 ரூபா, கிராமம்-200 ரூபா என அதிகரிக்கப்பட வேண்டும்.


★ உணவுமுத்திரை எழுதுதல் வழங்குதல் பணிகளில் ஈடுபட்டுள்ள கிராம சேவை அலுவலர்களுக்கு ஒரு ரூபா வீதம் வழங்குதல் வேண்டும்.

★புதன்கிழமைகளில் உதவி அரச அதிபர் அலுவலகம் செல்லும் கிராமசேவை அலுவலகர்களுக்கு பிரயாணபடி வழங்குதல் வேண்டும்.

★ சமூக சேவைகள் டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் நடைபெற வேண்டும். (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டது!
### பிரதிக்கு முந்துங்கள்!!



### பங்குனித் திங்கள் இதழ்

அம்பாள் அடியார்களே!
உங்களுக்கோர் அருவிருந்து!!

## ஞானக்கதிர்
அன்பு-அறநெறி-ஆன்மீகம்

### இம் மாத கதிரிலே!....

★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாளை வழிபடும் முறைகள்
★ அம்பாளுக்குரிய விரத நாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இரத்தினங்கள், இலைகள் பற்றிய விளக்கம்.

**அம்பாளின் திருத்தலங்களான:**

□ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
□ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
□ பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்
□ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்

— ஆகியவற்றின் வரலாறுகளும், அற்புதங்களும்.

★ பகவான் சாயிபாபாவின் தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல ...... !

### விலை ரூபா 5/- மட்டுமே!

[சி-4086]


★சுதந்திரப் பிரகடனம் செய்த

# லித்து ஏனியாவிற்கு ஆதரவாக எஸ்தோனிய-லட்வியா போர்க்குரல்!

மாஸ்கோ, மார்ச் 25

சோவியத் அரசுக்கும் சுதந்திரப்பிரகடனம் செய்த லித்து ஏனியா மாநில அரசுக்கும் இடையே இன்னும் பதற்ற நிலை நிலவிவருகிறது

லித்துஏனியாமீதான இராணுவப்பய முறுத்தலை உடனடியாக நிறுத்தும் படி ஏனைய பால்டிக் மாநிலங்களான எஸ்தோனியாவும் லட்வியாவும் ஜனாதிபதி கோர்ப்பசேவை வலியுறுத்தியுள்ளன.

பால்டிக் மாநிலங்களான லித்துஏனியா, எஸ்தோனியா, லட்வியா, ஆகிய மூன்று மாநிலங்களும் சுதந்திரம் பெறும் கொள்கையில் ஒன்றுபட்டுள்ளன.

சுதந்திரமாக இயங்க விட வேண்டும் என்ற கோரிக்கையைமுன்வைத்துமாஸ்கோ அரசுடன் பேச்சுக்கள் நடத்த இம் மூன்று மாநிலங்களின் தலைவர்களும் முன் வந்துள்ளன.

இது சம்பந்தமாக கூட்டு நடவடிக்கை எடுக்க இணைப்புக்குழு ஒன்றையும் மூன்று மாநிலங்களும் அமைத்துள்ளன.

சுதந்திரப் பிரகடனம் குறித்து மாஸ்கோ அரசுயுத்த சன்னதம் கொண்டிருப்பதாக லித்துஏனியா அதிபர் திரு. லான்ட்ஸ்பெர்கிஸ், ஜனாதிபதி கோர்பச்சேவ் மீது குற்றஞ் சாட்டி உள்ளார்.

இதனிடையில்- லித்துஏனியாவின் சுதந்திரம் குறித்து கௌரவமான முறையில் இரு தரப்பினரும் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று ஐரோப்பிய சமூகம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பிரச்சினையைத் தீர்க்க பலாத்காரம்பாவிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

லிஸ்பனில் கூடிய ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்கள் இத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இதனிடையில் —

ஒருதலைப் பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்த லித்துஏனியாவின் தலை நகரினுள் சோவியத் யூனியனின் இராணுவம்நேற்று முன் தினம் பிரவேசித்தது.

நூற்றுக்கு மேற்பட்ட கவச வாகனங்களில் [illegible] தினர் சென்றனர். பீரங்கி வண்டிகளும் சென்றன.

லித்துஏனியா நாடாளுமன்றக் கட்டடம் அருகில் சோவியத் இராணுவப் படைகள் சென்ற போது, நாடாளுமன்றத்தில் லித்துஏனியாவின் எம்பிக்கள் சுதந்திர அரசாங்கத்தை பிரகடனம் செய்வது பற்றி விவாதம் நடத்திக் கொண்டிருந்தனர்.

முதல்நாள் சோவியத் இராணுவ ஹெலிக்கொப்டர்களில் இருந்து லித்துஏனியா தலைநகரில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

இதனிடையில் லித்து ஏனியத் தலைநகர் சென்ற இரண்டு அமெரிக்க ராஜதந்திரிகள் சோவியத் அரசால் வெளியேற்றப்பட்டனர். இது சம்பந்தமாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ராஜ தந்திரி ரீதியில் கடும் அபிப்பிராய மோதல்கள் ஏற்பட்டன.

லித்துஏனிய விஷயத்தில் அமெரிக்கா தேவையின்றித் தலையிடுவதாக மாஸ்கோ வானொலி நேற்றுக் குற்றஞ் சாட்டியது

லித்துஏனியாவில் இராணுவ அடக்கு முறைக்கு சோவியத் யூனியன் தயாராகுவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரிச்சேர்ட் சேனி கூறிய கருத்தைக் கண்டித்தே மாஸ்கோ வானொலி முன் கண்டவாறு குற்றஞ் சாட்டியது

### அதிபர் புஷ் எச்சரிக்கை

லித்துஏனியாவில் அடக்குமுறையைப் பிரயோகிக்கும் அல்லது பயமுறுத்தும் எந்த நடவடிக்கையும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்யும்படி மாஸ்கோ அரசு, லித்து ஏனியா மாநில அரசை வற்புறுத்தி வருகிறது. இதற்கு இணங்க முடியாது என்று லித்துஏனியாவின் தலைவர்கள் கூறிவிட்டனர்.

(எ)

## ஹங்கேரியில் பொதுத்தேர்தல்

புடாபெஸ்ற், மார்ச் 25

40 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக ஹங்கேரியில் நேற்று (ஞாயிறு) சுதந்திரப் பொதுத்தேர்தல் நடைபெற்றது

30 அரசியல் கட்சிகள் இத் தேர்தலில் போட்டியிட்டன.

(எ)

## மொரொக்கோ அரசு நடவடிக்கை

சர்வதேச மன்னிப்புச் சபையின் இரண்டு அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேறும்படி மொரொக்கோ அரசு அறிவித்தது.

மொரொக்கோவில் அரசு சார்பற்ற மனித உரிமை இயக்கப் பிரதிநிதிகளை சர்வதேச மன்னிப்புச் சபையின் இரண்டு பிரதிநிதிகளும் சந்தித்தனர்.

அதனைத் தொடர்ந்தே மொரொக்கோ வெளியேறும் உத்தரவைப் பிறப்பித்தது.

(எ)

## கோரிக்கை

வாஷிங்டன் மார்ச் 25

கியூபாவில் மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அதன் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ மீது நிர்ப்பந்தத்தை பிரயோகிக்கும்படி அமெரிக்க காங்கிரஸை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கோரியுள்ளார். (எ)

## பட்டாசு விபத்தில் 23 பேர் பலி

திருவனந்தபுரம், மார்ச் 25

கேரள மாநிலத்தில் கொல்லம் என்னும் இடத்தில் உள்ள பட்டாசுதயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் குறைந்தது 23 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

(எ)

ஆளும் கட்சிக்கு வாக்களிக்காத

## அரசு ஊழியருக்கு கல்தா; சிம்பாப்வே அதிபர் உத்தரவு!

ஹரார்ரே மார்ச் 25

எதிர்கட்சிகளுக்கு வாக்களிக்கும் அரசு ஊழியரின் பதவி பறிபோகும் என்று சிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபே எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

சிம்பாப்வே நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் இம் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

முகாபே தலைமையிலான சிம்பாப்வே ஆபிரிக்க தேசிய யூனியனின் கட்சியும் திரு. எட்கார் தெக்கரே தலைமையிலான சிம்பாப்வே ஐக்கிய இயக்கமும் இத்தேர்தல்களில் போட்டியிடுகின்றன.

திரு. தெக்கரே, ஜனாதிபதி தேர்தலில் திரு. முகாபேயை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

"முகாபே அரசில் பணிபுரிபவர்கள் அந்த அரசின் கொள்கைகளையும் ஏற்று அமுல் நடத்த வேண்டும். இப்படி ஜனாதிபதி முகாபே தனது கட்சிப்பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார். (எ)

## மறுப்பு

வாஷிங்டன் மார்ச் 25

பனாமாவின் முன்னாள் சர்வாதிகாரி மனுவல் நொறிபேகாவைக் கைது செய்தது தொடர்பாக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏக்கும் அதிபர் புஷ்ஷுக்கும் இடையே கருத்து வேற்றுமை இருந்ததாகக் கூறப்படுவதைக் வெள்ளை மாளிகை மறுத்தது. (எ)

## ஆஸி- தேர்தல்

மெல்போர்ன், மார்ச் 25

ஆஸ்திரேலியப் பொதுத் தேர்தல் சென்ற(சனி) இடம் பெற்றது.

ஆளும் தொழிற் கட்சிக்கும் எதிர்க்கட்சிக் கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

(எ)

## மீண்டும் கோஷ்டி மோதல்

புதுடில்லி, மார்ச் 25

இந்தியாவின் ஆளும் கட்சியான ஜனதா தளத்தில் கோஷ்டிப்பூசல் மீண்டும் உருவெடுத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனதா தள நாடாளுமன்றக்குழுவின் செயலாளர் பதவியில் இருந்து அமைச்சர் அஜித்சிங்கை நீக்கி விட்டு, திரு. யஸ்வந்த்சிங்கை குழுவின் தலைவரான வரும் துணைப்பிரதமருமான திரு. தேவிலால் நியமித்திருக்கிறார். இதனைத்தொடர்ந்தே உட்பூசல் ஏற்பட்டுள்ளது.

திரு அஜித்சிங், ஹரியானா முதலமைச்சரும் தேவிலாலின் புதல்வருமான திரு ஓம்பிரகாஷ் சௌதாலாவை பகிரங்கமாகக் கண்டித்து வருபவர்களில்ஒருவர்.

முன்னாள்பிரதமரான மறைந்த திரு. சரண்சிங்கின் புதல்வர் தான் அஜித்சிங். (எ)

## கொன்றா இளர்ச்சி கலைப்பு

மனாகுவா, மார்ச் 25

கொன்றா கிளர்ச்சி அமைப்பைக் கலைக்க அதன் தலைமைப் பீடம் ஒத்துக் கொண்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக திருமதி வயலெற்றா ஷிமொறா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பதவி ஏற்கிறார்.

அதற்கு முன்னதாக கொன்றா அமைப்பைக் கலைத்து விடுவது என்று கொன்றா அமைப்பின் தலைவர்கள் நிக்கரகுவா ஆர்ச் பிஷப்புடன் நடத்திய பேச்சுக்களில் ஏற்றுக்கொண்டனர். (எ)

## குண்டுப் பயமுறுத்தல்

ஜெருசலம், மார்ச் 25

சோவியத்தில் இருந்து யூதர்களை இஸ்ரவேலுக்கு ஏற்றிச் செல்லும் விமானங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் என்று பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.


## தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்யவும், பழகவும் ஆண்களும்,பெண்களும்தேவை தங்குவதற்கும் சாப்பாட்டிற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும் அத்துடன் வேறு சலுகைகளும் உண்டு. அனுபவமுள்ளவர்சட்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை**
அரஸ்கோ கட்டடம்,
163, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். (சி-4145)

## Engineering Drawing Class

[1ஆம் வருட பொறியியல் மாணவர்களுக்கு]
ஆரம்பம்: 28 – 03 – 90
தொடர்பு கொள்க:-
03, வைமன் வீதி, நல்லூர்.
[12127]

பயிலுநர் ஆசிரியராக தெரிவானவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

## நீங்களும் பட்டதாரியாகலாம்

3 வருட பயிற்சித் திட்டம்

★ க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வெளிவாரியாக B. A. பட்டப்படிப்பினை மேற்கொள்ள இம்மாதம் 30ஆம் திகதி வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யலாம்.

(பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.)

★ ஆசிரியராகக் கடமையாற்றும் பொழுதே பட்டதாரிகளாக மாற உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.


பயிற்சி வகுப்புகள் வார நாட்களில் பி. ப. 4—6 மணி

ஆரம்பம்: 03 — 04 — 90

விபரங்களுக்கு நேரில்:-

ASTAN INSTITUTE
166/1, Hospital Road, JAFFNA.
(A S சங்கரப்பிள்ளை கட்டடம் 1ம் மாடி)
[சி-4137]


அரை ஆண்டு
## கண்ணீர் அஞ்சலி



**திரு. செல்லையா ஜோசப்**

ஆண்டவன் படைப்பு: 04 – 08 – 1958
ஆண்டவன் அடியில்: 26 – 09 – 1989


என் இதய வானத்திலே சிறகடித்த
வான் பறவையே!
உங்கள் பிரிவுத் துடிப்பில் என்
சிறகு உடைந்து போனதப்பா.
பாச மலரால் மலர்ந்து
அன்பால் பண்பால் உயர்ந்து
அழியா வாழ்விற்கு சென்று விட்ட எங்கள்
அன்புத் தெய்வமே!
உங்கள் பொற்பாதங்களில் கண்ணீர் மலர்களை
காணிக்கை ஆக்குகிறேன்.

உமது பிரிவால் வாடும்
மனைவி – வினித்தா,
மகன் – கொன்சன்,
உறவினர்கள், நண்பர்கள்
செல்வபுரம்,
முல்லைத்தீவு. [12130]


## ECALOM
(மனோகரா சந்தி)

A/L 90
பொருளியல் பகுதி II
பிரிவு II
சென்மதி நிலுவை:
திரு. உதயன்
ஆரம்பம்: 27 - 03 - 1990
(செவ்வாய் காலை 6-30 மணி)
பொருளியல் வினாவிடை
(கடந்த 14 வருட வினாக்கள்)
திங்கள், புதன் மாலை 5-00 மணி
(சி-4126)


## 10-ம் ஆண்டு நினைவுஅஞ்சலி




**திரு. நமசிவாயம் தம்பு**
[இளைப்பாறிய நில அளவையாளர்]

தோற்றம்: 13-11-1888
மறைவு: 26-3-1980

ஆண்டுகள் பத்தானாலும்
நீங்காது என்றும்
திகழ்வாய் எம்
இதயக் கோவிலில்
அன்புடன் நினைவு கூரும்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரர், பேத்திகள்.
கோப்பாய் தெற்கு. (2956)

## ஓராண்டு நினைவஞ்சலி
(26 – 03 – 1990 திங்கட்கிழமை)



மலர்வு: 13 - 04 - 1955
★●★●
உதிர்வு: 26 - 03 - 1989

**இராசையா யோகப்பிரதாபன் (B.Sc.)**
[ஆசிரியர், சென்சேவையர் கல்லூரி, நுவரெலியா]

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, அமரத்துவம் அடைந்த எமது ஆசை அண்ணாவே உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புச் சகோதரிகள்.
3 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை. (2956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில்

# புலிகளின் கண்காணிப்புடன் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு

மட்டக்களப்பு மார்ச் 26

மட்டக்களப்பு நகரில் பொலீஸாரால் அமுல் செய்யப்பட்டுள்ள வீதிப்போக்குவரத்து விதிகளை ஒரு சிலர் மீறி வருவதால் கடந்த வாரம் முதல் தமிழீழ விடுதலைப்புலிகளும் கண்காணிப்பு செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு அதே இடத்தில் வைத்து எச்சரிக்கையுடன் தண்டனையும் விதிக்கப்படுகிறது. (இ-21)

# ஆலய அற்புதங்களை வெளியிடுவதால் மக்களை வழிபாட்டுக்குத் தூண்டலாம்

## திக்கரை விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி

காரைநகர் மார்ச் 26

ஊர்தோறும் அமைந்திருக்கும் ஆலயங்களுக்கு தனிமையான வரலாறுகள் உண்டு. அவ்வூர் மக்கள் இறையருளினால் அடைந்த அற்புதப் பலன்களும் உண்டு. அவற்றையெல்லாம் அந்நலங்களின் வரலாற்றில் இடம்பெறச் செய்வதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் அவற்றை அறியவும், ஆலய வழிபாடுகளில் அக்கறை கொள்ளவும் தூண்டுகோலாக அமையும்.

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திக்கரை முருகமூர்த்தி கோயில் குடமுழுக்கு விழா மலரினை வெளியிட்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோயில் மண்டபத்தில் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. ச. வி. முருகேசு தலைமையில் குடமுழுக்கு விழா மிகச் சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

அப்போது குடமுழுக்கு விழா மலரை சிவத்தமிழ்ச் செல்வி வெளியிட்டு வைத்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமச்சாரிய சுவாமிகள் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

குடமுழுக்கு விழா மலரின் ஆசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனுக்கு தலைவர் ச. வி. முருகேசு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

ஆலயங்களின் கும்பாபிஷேகத் தினங்களை யொட்டி வெளிவரும் குடமுழுக்கு விழா மலர்களில் ஆலயங்களின் வரலாறுகள் இடம்பெறுவது சமய வளர்ச்சிக்கும் ஆலயங்களின் மகிமைக்கும் சிறந்த பொக்கிஷங்களாக அமைகின்றன. என்றும் சிவத்தமிழ்ச் செல்வி தமது உரையில் தெரிவித்தார்.

திக்கரை அந்தாதிக் கீர்த்தனைகள் பாடிய பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயருக்கு திரு மு. பாலசிங்கம், பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு ஐ. தி. சம்பந்தன் அறிமுகவுரையை நிகழ்த்துகையில் திக்கரை முருகன் மகிமைகளையும், அற்புத செய்கைகளையும் விளக்கிக் கூறினார். சுமார் 20 லட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும் இராஜகோபுரத்திற்கு தாராளமாக நிதியுதவி வழங்குமாறு முருகன் அடியார்களை அவர் வேண்டிக்கொண்டார்.

திருவாளர்கள் பொ. சுப்பிரமணியம், த. அம்பிகைபாகன், வே. நடராசா, ஆகியோரும் விழாவில் உரை நிகழ்த்தினர். மலர் வெளியீட்டுவிழாவைத்தொடர்ந்து அகில இலங்கைக் கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜா தலைமையில் 'கந்தன் நான்முகனைச் சிறைவைத்தது' என்னும்விடயம் பற்றிய பட்டி மன்றம் இடம் பெற்றது. (அ)

Thank You
St. Jude
S. B. KUMAR
[2963]

## IN MEMORIAM

In undying and treasured memory of my dearest mummy.

Faith Rasamalikai Karalakulasingam
Died 26-03-85.

Your hands that did so much for me
are resting at God's will.
Your smiling face, your heart of love
The voice I loved is still.

Fondly remembered by your ever sorrowing daughter Chandra.

82, 4th Cross Street,
Jaffna.

[2954]

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## முக்கிய அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைப் பிரதேசத்தில் சோலைவரி அறவீடுகள் சார்பாக 1988 ஆம், 1989 ஆம், 1990 ஆம் ஆண்டுகளுக்கு வரியிறுப்பாளர்கட்கு பிரதேச சபையில் நான்கு உப அலுவலகங்களால் வழங்கப்பட்ட சோலைவரி அறவீடு சார்பான அறிவித்தல்களின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் முறையே முதலாம் கந்தாயம் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பும், இரண்டாம் கந்தாயம் யூன் 30 ஆம் திகதிக்கு முன்பும், மூன்றாம் கந்தாயம் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும், நான்காம் கந்தாயம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பும், சோலைவரி பிரதேசசபை உப அலுவலகங்களில் செலுத்தப்படவேண்டும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சோலைவரி செலுத்தத்தவறும் பட்சத்தில், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் குடிமனைகட்கும், வெற்றுக்காணிகட்கும், செலுத்தப்படவேண்டிய சோலைவரி கந்தாயப் பணத்தின் பதினைந்து வீத தண்ட அறவீடும், குடிமனைகள், வெற்றுக் காணிகள் அல்லாத ஆதனங்களின் சோலைவரி கந்தாயப் பணத்தின் இருபது வீத தண்ட அறவீடும் 01 - 01 - 1988 ஆம் திகதி தொடக்கம் அறவிடப்படும் என்பதனை பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

மேற் கூறப்பட்ட ஆண்டுகளில் வழங்கப்பட்ட சோலைவரி அறிவித்தல்களில் தண்ட அறவீடு சார்பான விபரங்கள் தவறுதலாகப் பத்துவீதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இதனைத் திருத்தி மேற்கூறப்பட்டவாறு தண்ட அறவீடு அறவிடப்படும் என்பதனைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மேற் கூறப்பட்ட சோலைவரி அறவீடுகள் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் சோலைவரி அறவீடுகள் சார்பான ஏற்பாடுகளுக்கு அமைவாகவே சோலைவரி அறவீடு சார்பான நடவடிக்கைகள் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் நான்கு உப அலுவலகங்களான மானிப்பாய் பட்டின உப அலுவலகம், மானிப்பாய் கிராம உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம், பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் ஆகிய உப அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் சோலைவரி அறவீடுகள் சார்பான மேலதிக தகவல்களை மேற்கூறப்பட்ட நான்கு உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

க. சபாபதிப்பிள்ளை,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
நகர மண்டபம், மானிப்பாய்,
21. 03. 1990 (சி-4149)

# பிற்மன் ஆங்கிலப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

நேற்றைய தொடர்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாண ஆங்கிலக் கழகத்தால் பயிற்சி அளிக்கப்பட்டு லண்டன் பிற்மன் சோதனை நிறுவனத்தால் நடத்தப்படும் பிறமொழி பேசுவோருக்கான ஆங்கிலப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பட்டியலில் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது. பட்டியலின் இறுதிப்பகுதி இன்று வெளியாகிறது.

### உயர் இடைநிலை முதல் வகுப்பு

தமயந்தி இராசரத்தினம், சாந்திகுமாரி அரியரட்ணம் திருமதி ருத் ஜெபரஞ்சனி அரயரட்ணம், நடராஜா நிமலன்

### சித்தி

மேரி ஆன் சியாமளா தேவசகாயம், ரஷெல் ஜோன், அருட்பிரகாசம் கப்ரியல், பானுமதி சந்திரசேகர், பொன்மலர் கிருஷ்ணபிள்ளை மரியா யூடின் டாஷி தியோப்பிலஸ், ஆஷித்தா தியாகராஜா, மாணிக்கவாசகர் விக்னேஸ்வரமூர்த்தி, ஜெனிபர் சுபோதினி அந்தோனிப்பிள்ளை, சதாசிவம் தர்மராஜா, பிரேமினி சிவபாலசுந்தரம், உமா முத்துத்தம்பி, செல்லத்துரை தேவரஞ்சன், யசோதா மகாதேவா, கலாராணி நவரட்ணம், முருகையா கோசலை, சாந்தநாதன் அரவிந்தன், சோமசுந்தரம் ஈழநேசன், பரராஜசிங்கம்நெயல்செல்வகுமார், நடராஜா மனீஸ்வரன், திருமதி சரோஜினிதேவி குணசிங்கம், திருமதி வசுவதா தில்லைநாதன், கனகசபாபதி அருள்மொழி, தயாரணி நவரட்ணம், ரேணுகா தனபாலரட்ணம், அனுராதா துரைராஜா.

### உயர்தரம் முதல் வகுப்பு

சாந்திக்குமார்அரியரட்ணம் திருமதி ருத் ஜெபரஞ்சனி அரியரட்ணம்,

### சித்தி

திருமதி வசுவதா தில்லைநாதன், மலியா யூடின் டாஷி தியோபிலஸ், மேரி ஆன் சியாமளா தேவசகாயம், பிரேமி சிவபாலசுந்தரம், சுகிர்தகுமாரி சரவணபவானந்தன், பானுமதி சந்திரசேகர், கலாராணி நவரட்ணம், சதாசிவம் தர்மராஜா, பொன்மலர் கிருஷ்ணபிள்ளை, நடராஜா மனீஸ்வரன், பாக்கியநாதன் பாக்கியராஜா, செல்லத்துரை தேவரஞ்சன், உமா முத்துத்தம்பி, தமயந்தி இராசரத்தினம், ஜெனிபர் சுபோதினி அந்தனிப்பிள்ளை, சோமசுந்தரம் ஈழநேசன், பங்கிரஸ் நோயல் ரொபின்சன். (இ-7)

## மாகாண---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளை பதவி நீக்குதல், புதிய அதிகாரிகளை நியமித்தல் தொடர்பான விடயங்களில் அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு ஆளுநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதியின் உத்தரவு

''1987ஆம் ஆண்டு மாகாண சபைச் சட்டத்தின் 42ஆம் பிரிவு, 31ஆம் ஷரத்தின் பிரகாரம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட முதலமைச்சர், மாகாணசபை அமைச்சர்கள், பிரதம செயலாளர்கள் ஆகியோர் சேவைக்கு வரத் தவறியிருப்பதனாலும், செயல்படத் தவறியிருப்பதனாலும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயல்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்பதில் நான் திருப்தி அடைந்து உள்ளேன்.''

''எனவே இத்தகைய உத்தியோகத்தர்களைப் பதவி நீக்கம் செய்து அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்களை நியமிப்பது அவசியமாகிறது''

''இந்த விஷயத்தில் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஒப்புதலைப் பெறமுடியாதிருக்கின்றது.''

''எனவே அரசியல் யாப்பின் 154 (பி) பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி திரு. வேலுப்பிள்ளை நடராசா சிவராசாவை மாகாண பிரதம செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கும், திரு. சொர்ணலிங்கம் கணேசநாதனை அப்பதவிக்கு நியமிப்பதற்கும் உத்தரவிடுகின்றேன்.''

''அவ்வாறு அவசியம் ஏற்படும் பட்சத்தில் மாகாண சபைச் சட்டத்தின் 42ஆம் ஷரத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உத்தியோகத்தர்களைப் பதவி நீக்குவதற்கும் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆளுநரைப் பணிக்கிறேன்.''

இப்படி ஜனாதிபதியின் உத்தரவு அமைந்துள்ளது. (உ-எ)

## கூட்டம்

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் பதினொராவது வருடாந்த பொதுக் கூட்டம் 28ந் திகதி புதன்கிழமை நகரசபை செயலாளர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்று பகல் அங்கத்தவர்களுக்கான மதிய போசன விருந்தும் இடம் பெறவுள்ளதாக சங்கச் செயலாளர் திருமதி வ. தவபாலசிங்கம் தெரிவித்தார். (க-117)

## அரசு-புலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று'' என்று சொன்னார்.

''புதிய செயலாளர்கள் நியமனம் தற்காலிகமான ஏற்பாடே! நாம் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் உரியவர்களை உரிய பதவிக்கு நியமிப்போம்'' என்றும் அவர் சொன்னார்.

எனினும் புதியவர்களை இந்தப் பதவிகளுக்கு நியமிப்பது குறித்து கொழும்புப் பேச்சுக்களின் போது அரசாங்கம் தங்கள் தரப்பு ஆலோசனையைப் பெற்றுக் கொண்டது என்பதை அவர் ஊர்ஜிதப்படுத்தினார்.

''மாகாணசபைக்குப் புதிய செயலாளர்களை நியமித்து அதன் நிர்வாகம் ஒழுங்காக இயங்க வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது உள்ள மாகாணசபை கலைக்கப்படாமல் புதிய தேர்தல்களை நடத்துவது எப்படி? இயங்காதுள்ள மாகாண சபையைக் கலைக்க சட்டத்தில் ஏதேனும் இடமுண்டா? — என்று அப்பிரமுகரிடம் நமது செய்தியாளர் கேட்டார்.

''சட்டத்தில் இடமுண்டா இல்லையா என்பது குறித்து நாம் திட்டவட்டமான கருத்துக் கூற முடியாது.

''ஆனால் சட்டத்தில் தெளிவாக இடம் இருக்கிறது. அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மாகாண சபைக்கு புதிய தேர்தல்களை நாம் நடத்துவதை எந்தச் சட்டமும் தடைசெய்ய முடியாது'' — [illegible] வட்டமாகத் தமக்கு உறுதி [illegible] பதிலளித்தார். (உ)

## இந்தியப்படை . . .

டிருந்தன. மாலை 5 மணியளவில் அவை நெடிய காட்டுப் பிள்ளையார் கோவில், பழைய பொலீஸ் நிலைய சந்தி, ஊரிக்காடு ஆகியபகுதிகளூடாக இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்தில் பங்குபற்றியவர்கள் இந்தியப் படையினதும், முன்னைய இந்திய அரசினதும் தவறான நடவடிக்கைகளைக் கூறி ஒப்பாரி வைத்தபடி சென்றனர்.

பின்னர் வல்வை சந்தியில் வைத்து மக்கள் ஆரவாரத்தின் மத்தியில் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன

பின்னர் ஊர்வலத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதே போல கொடும்பாவி எரிப்பு நிகழ்ச்சி ஒன்று நெல்லியடியிலும் நடைபெற்றது. இந்தியப் படையினரையும், முன்னைய இந்திய அரசையும் கண்டித்து, பதாகைகளை ஏந்தியபடி, கொடும்பாவிகளை தூக்கிக்கொண்டு, ஒப்பாரி வைத்தவாறு மக்கள் ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

# ஈழப்போராட்ட வரலாற்றில் முஸ்லிம்களின் பங்கு அளப்பரியது

## ஜின்னா மைதானக் கூட்டத்தில் ஆஞ்சநேயர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

''தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆரம்ப காலந்தொட்டு முஸ்லீம் மக்களும் பல தியாகங்களை புரிந்து வந்துள்ளனர். அவர்களின் தியாகம் அளப்பரியது.

★ இலங்கை அரசின் அடக்கு முறைக்கு ஆரம்பத்தில் கிழக்கிலங்கைவாழ் முஸ்லீம்களும் உள்ளாகினர். அதனால் உரிமைப்போராட்டம் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பெருவரவேற்பைப் பெற்றது.

மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் நம் எல்லோரும் தமிழர்களே!

இப்போது போல் எதிர்காலத்திலும் ஒன்றிணைந்து போராடி உரிமைகளை வென்றெடுப்போம்''.

— இவ்வாறு விடுதலைப்புலிகளின் வலிகாமம் பிரிவு அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுக்கூட்டம்ஒன்று நேற்று மாலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே திரு. ஆஞ்சநேயர் இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி பாரதி, மற்றும் வீர மரணமடைந்த போராளி சல்மானின் சகோதரர் ஜனப் எம். ஏ. ஸி. ரஸிம் ஆகியோர் கொடிஏற்றிவைத்தனர்,

ஜனாப் அப்த்துல் காதர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

முஸ்லீம் பிரமுகர்கள் எம். ஏ. ஸி. இக்பால், எம். ஏ. நூர்முகமது, எம். முக்தார், என். எம். தாஜ் ஆகியோரும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த தி. இராசநாயகம், க. செல்வநாயகம், பொன் பூலோகசிங்கம், செல்வி. பாரதி ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினர். [உ-5]

# கரவெட்டி, வடமராட்சியில் பதவி ஏற்ற கிராமசேவையாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் மாவட்டத்தில் புதிய கிராமசேவையாளர் பிரிவுகளில் கிராமசேவையாளர்கள் பதவிகளை ஏற்றுள்ளனர்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவையாளர்களின் விவரம் ஏற்கனவே உதயனில் வெளிவந்தது.

இன்றைய உதயனில் கரவெட்டி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பதவியேற்றவர்களின் விவரம் வெளிவருகிறது.

### கரவெட்டி

சரணவாய் தெற்கு(J.348)- ஏ. திரவியம், கரணவாய் மேற்கு (J.349) - பீ. மகேந்திரன், கரணவாய் (J. 350) - வி. சிறீரங்கநாதன், கரணவாய் கிழக்கு (J 351)-ரீ. வரதராஜா, உடுப்பிட்டி (J 352) - வி. பாலசிங்கம், உடுப்பிட்டி வடக்கு (J.353) - பீ. கணேஸ், உடுப்பிட்டி தெற்கு (J.354) - எஸ். மகாலிங்கம்,

வல்வெட்டி (J.355) - இன்னும் நியமிக்கப்படவில்லை, வல்வெட்டி மத்தி (J.356) - பீ. சின்னத்தம்பி, சமரபாகு (J.357) - எஸ். செல்வநாதன், இமையாணன் (J.358) - கே. கந்தசாமி, இமையாணன் கிழக்கு (J 359) - கே. இரத்தினம், கரணவாய் வடக்கு (J.360) - கே. இரத்தினசிங்கம், கரணவாய் வடமேற்கு(J 361) - எம். கணபதிப்பிள்ளை, சரணவாய் மத்தி (J.362) - எஸ், விஜயகுமார், கரவெட்டி மேற்கு - (J. 363) - எஸ். குணராஜா, கரவெட்டி வடக்கு (J.364) - எம். வேதாபரணம், கரவெட்டி தெற்கு (J.365) - ஏ. சூரியகுமாரன், மத்தோனி (J.366) எஸ். வேலாயுதம், கரவெட்டி மத்தி (J.367) - பீ. சுந்தரபாரதி, கரவெட்டி கிழக்கு (J 368) - கே. தில்லையம்பலம், கட்டைவேலி (J.369) - பீ. மயில்வாகனம், துன்னாலை தெற்கு (J.370) - கே. பரம்சோதி, துன்னாலை கிழக்கு (J.371)- ஜி. மகேந்திரராஜா, துன்னாலை (J 372) - எஸ். சிவசம்பு, துன்னாலை மத்தி (J.373) - கே. வி. சிவபாலன், துன்னாலை மேற்கு (J.374) - எஸ். சுந்தரலிங்கம், நெல்லியடி வடக்கு (J,375)- வி. சுந்தரலிங்கம், நெல்லியடி (J.376) - எஸ். பிரபாகரன், நெல்லியடி கிழக்கு (J.377) - இன்னும் நியமிக்கப்படவில்லை, அல்வாய் (J.378) - ரீ. பன்னீர்ச்செல்வன், அல்வாய் தெற்கு (J.379) - பீ. சோமசுந்தரம், அல்வாய் கிழக்கு (J 380) - வி. தியாகராஜா, அத்தை (J.381)-எஸ். செந்தூரராஜா, கப்பூது (J.382) - இன்னும் நியமிக்கப் படவில்லை,

### வடமராட்சி வடக்கு

தொண்டமானாறு தெற்கு (J 383) - எஸ். ஜெகநாதன், தொண்டமானாறு வடக்கு (J.384) - வி. சிவசுப்பிரமணியம், கெருடாவில் தெற்கு (J.385)-எஸ். சிவபாலசிங்கம், கெருடாவில் வடக்கு (J.386)- வி. இராஜேந்திரன், கெருடாவில் கிழக்கு(J387) - எஸ். பாலசுந்தரம், வல்வெட்டித்துறை வடமேற்கு (J.388) - எஸ். சிவராசன், வல்வெட்டித்துறை வட மத்தி (J.389) - கே. ஜெயசீலன், வல்வெட்டித்துறை வட-கிழக்கு [J 390] -இன்னும் நியமிக்கப் படவில்லை, வல்வெட்டித் துறை தென் மேற்கு [J. 391] - ரீ. கணபதிப்பிள்ளை, வல்வெட்டித்துறை தென்கிழக்கு [J. 392] -இன்னும் நியமிக்கப் படவில்லை.

பொலிகண்டி மேற்கு [J. 393] -இன்னும் நியமிக்கப் படவில்லை, பொலிகண்டி கிழக்கு [J. 394] - வி. ஜெயவீரசிங்கம், பொலிகண்டி தெற்கு [J. 395] - வி. வன்னிமாறன், அல்வாய் மேற்கு [J. 396] - கே. அருளானந்தன், அல்வாய் வட மேற்கு [J.397] - எஸ். செல்வலிங்கம், அல்வாய் வட மத்தி [J 398] - இன்னும் நியமிக்கப்படவில்லை, வியாபாரிமூலை [J. 399] ஆர். இராஜேந்திரம் அல்வாய் வடக்கு [J. 400] - பீ. நடராஜா, பருத்தித்துறை (J. 401] பீ. நந்தகுமாரன்.

பருத்தித்துறை தெற்கு [J. 402]- எஸ். யோகநாதன், பருத்தித்துறை கிழக்கு [J.403] - ரீ. தர்மதாஸ், தும்பளை [J. 404] - ஜே. ரீ. அந்தோனி, தும்பளை கிழக்கு [J 405] - இன்னும் நியமிக்கப்படவில்லை, கற்கோவளம் [J. 406] - ஏ. கே. சிவசண்முகம், புலோலி வடக்கு [J. 407] - கே. வீரகத்திப்பிள்ளை, புலோலி வட கிழக்கு [J. 408] - வி. சேதுநாயகம், புலோலி மத்தி [J 409] - எஸ். நாகதீபசோதிரூபன், புலோலி மேற்கு [J. 410] - எம். மார்க்கண்டு, புலோலி தென் மேற்கு [J. 411] - கே. வேலாயுதபிள்ளை, புலோலி வட மேற்கு [J. 412] - கே. சண்முகநாதன், புலோலி கிழக்கு [J. 413] - ரீ. சுபேந்திரராஜா, புலோலி தெற்கு [J. 414] - கே. கே. சண்முகநாதன், மந்திகை [J. 415) - ஜீ. ஏ. ஞானச்சந்திரன், வல்லிபுரம் [J. 416] - பீ இராஜேந்திரன், துன்னாலை வடக்கு [J. 417] - எஸ். ஜெகதீஸ்வரன்.

### வடமராட்சி கிழக்கு

மாலகட்டு (J. 418) - கே. யோகேந்திரநாதன், குடத்தனை (J. 419) - எஸ். சிவலிங்கம், குடத்தனை காரையூர் (J. 420) - எஸ். பஞ்சலிங்கம், பொற்பதை(J. 421) - என். புலேந்திரன், அம்பன் (J. 422) - ஏ. மகாலிங்கம், நாகர்கோயில் கிழக்கு (J. 423) - கே. பாலச்சந்திரன், நாகர்கோயில் மேற்கு (J. 424) - எம். தர்மகுலசிங்கம், நாகர்கோயில் தெற்கு (J 425) - எஸ். வசந்தகுமார்.

செம்பியன்பற்று வடக்கு (J. 426) - இன்னும் நியமிக்கப்படவில்லை, செம்பியன்பற்று தெற்கு (J. 427) - பீ. எஸ். வண்டார்கோன், மருதங்கேணி [J. 428] - எம். கந்தசாமி, வதிரியான் [J 429] - எம். யோசேப், உடுத்துறை [J. 430] - கே. சிவபாதவிருதயர், ஆழியவளை [J 431] - வி. நடராஜா, வெற்றிலைக்கேணி [J 432] - கே. அரியரத்தினம், முள்ளியான் [J. 433] - கே. கறுவல்தம்பி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி...

ஏற்கனவே நகல் சட்டமூலம் ஒன்று அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் இது சம்பந்தமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதேவேளையில் மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி சபைகளிலும் 18முதல 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பிரதிநிதித்துவம் செய்வது தொடர்பாக இளைஞர் பிரச்சினை பற்றி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அரசு கவனத்திற்கு எடுத்துக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சிபாரிசுகளை அமுல் நடத்துவது குறித்து ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசித்து தேவையான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ - எ)

எமது இன்றைய புதிய வெளியீடு
அர்ஜுன் - சிந்து - கவுண்டமணி - செந்தில் நடித்த
செந்தில்நாதனின்
★ பாட்டாளி மகன் ★ (ஒறிஜினல்)
வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி - யாழ்ப்பாணம். [12135]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்




26 - 03 - 1990 திங்கட்கிழமை

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### ஆச்சிமுத்து பொன்னையா

சண்டிலிப்பாய் ஆலங்குழாய் திருமதி ஆச்சிமுத்து பொன்னையா அவர்கள் 25 - 03 - 90 ஞாயிற்றுக் கிழமை காலை அன்னாரது இல்லத்தில் காலமானார்.

இவர் மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் கனகசபாபதி (கனடா), கண்ணம்மா ஆகியோரின் தாயாரும், திரு க. இராமலிங்கம் அவர்களின் மாமியாரும், தேவதாஸ், மோகனதாஸ், கண்ண தாஸ், சுலோஜனா, நவரத்தினராசா, ஹேமமாலினி, சுஜாதா, ஆகியோரின் அருமைப் பேத்தியாரும், காலஞ் சென்ற பொன்னம்மா, அம்பலவாணர் (மலேசியா) முருகேசம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) இராசம்மா ஆகியோரின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 - 03 - 90 திங்கட்கிழமை பகல் 1.00 மணியளவில் ஆலங்குழாய் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கொட்டுப்பனை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
க. இராமலிங்கம் (மருமகன்)

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய். [2967]

அகால மரணம்
### தயாழினி பாலராஜா

[மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி V. T. I.]

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த தயாழினி பாலராஜா 24.-3-1990 அன்று அகாலமரணமானார். இவர் பாலராஜா, பமீலா ஆகியோரின் அன்பு மகளும் ரஜனியின் அருமைச் சகோதரியும், காலஞ் சென்ற தேவபாலன், தேவானந்தன், தேவேந்திரன் ஆகியோரின் மருமகளும், விமலாவின் பெறாமகளுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 26-3-1990 திங்கள் மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ஜோ. தேவானந்தன்

தயாழலொட்ஜ்,
ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி. [12131]

### திருமதி கனகேஸ்வரி தம்பு

திருமதி கனகேஸ்வரி தம்பு காலமாகிவிட்டார். இவர் கொக்குவிலைச் சேர்ந்த காலம்சென்ற E.S.S செல்லத்துரை (கண்ணாடி) அன்னம்மா ஆகியோரின் மகளும், தம்புவின் மனைவியும், ரவீந்திரன் (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), குலேந்திரன் (France), வாசுகி ஆகியோரின் தாயாரும், இன்பத்தின் மாமியாரும், நிவேதனாவின் பேத்தியும், திருமதி அருளம்மா இராசதுரையின் சகோதரியுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று 26-03-1990(திங்கள்) காலை 10மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. [2966]

தகவல்:
தம்பு.

திருவாளர்
### மனுவல்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வட்டக்கச்சியில் வதிந்தவருமான திருவாளர் மனுவல் பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை இறைவனில் துயில்கொண்டு விட்டார்.

இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி ஆனாப்பிள்ளையின் அன்புச் சகோதரரும், அருட் செல்வி மரியகொறற்றி (திருச் சிலுவை சபை), காலம் சென்ற சிறில், வலன்ரையின், இன்பம், புஷ்பம், புனிதம் (கனடா), சுகிர்தம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இராசேஸ்வரி சிறில், திருமதி மணி வலன்ரைன் றெஜினோல்ட், இராசசிங்கம் (கனடா), ஜோர்ச் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரது பூதவுடல் 27-03-1990 செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு இலக்கம் 60, கோவில் வீதியில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

70, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [12133]

### சவிரிமுத்து மேரியோசவ்

நாரந்தனையைச் சேர்ந்த சவிரிமுத்து மேரியோசவ் அவர்கள் 22-03-1990 வியாழக்கிழமை காலமானார்.

இவர் மேரி லூடாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற சவிரிமுத்து - முத்தாச்சி அவர்களின் அன்பு மகனும், காலம்சென்ற செல்லத்துரை - அன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், மனுவேற்பிள்ளை றோசலினின் பெறாமகனும், காலம்சென்ற தங்கப்பொன், காலம்சென்ற அலோசியஸ், பிளசம்பேபி, கெலன்மேபிள், யேம்ஸ் ஆகியோரின் சகோதரரும், றீற்றா, விவி, காலம்சென்ற பொன்னுத்தம்பி, பி. மரியநாயகம், றூபி, X. R. பிரான்சிஸ், செல்வம் ஆகியோரின் மைத்துனரும், டேவிற், அன்ரனிதாஸ் ஆகியோரின் சகலனும், டெல்வின் (நிஷா வீடியோ), டென்சன் (சுவிற்சர்லாந்), டெனிஜன், டெனிஷா ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 28-03 1990 புதன்கிழமை காலை 9-00 மணியளவில் புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் நாரந்தனை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி லூடா மேரியோசவ்

''லூட்ஸ் மகால்''
நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை. [2969]

# இந்தியப்படை விலகலுடன் நாட்டில் அமைதி, சுபீட்சம் ஏற்பட அறிகுறி

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 26

அமைதிப் படை முற்றாக விலக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் அமைதியும் சுபீட்சமும் சட்டமும் ஏற்படக் கூடிய அறிகுறிகள் தோன்றியுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகை நிறுவன வைபவம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து அமைதிப்படை முற்றாக வெளியேறியதனால் நமது சந்தேகங்களும் அச்சங்களும் மறைந்து விட்டன.

இதற்காக இந்திய அரசுக்கும் அதன் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

சிங்கள, தமிழ், இஸ்லாம் மக்கள் இலங்கையை தங்கள் தாயகமாகக் கொண்டுள்ளனர்.

அவர்களுடையஉரிமைகளை நாம் புரிந்து நிறைவேற்றத் தவறியதனால் தான் இலங்கைக்கு வெளிநாட்டு இராணுவம் ஒன்று வரவழைக்கப் பட்டது.

முந்திய இந்திய அரசு தேசப் பற்று என்ற போர்வையில் அதன் துருப்புக்களை இந்த நாட்டுக்கு அனுப்பி வடக்கிலும் கிழக்கிலும் குழப்பங்களை ஏற்படுத்தியது.

இந்தியத் துருப்புக்களின் வருகையைக் காட்டி தென் இலங்கையில் குழப்பங்கள் ஏற்பட்டன.

எனது வேண்டுகோளை ஏற்று இந்தியாவின் தற்போதைய அரசு நுரிதமாக தனது படைகளைத் திருப்பி அழைத்துக்கொண்டது.

இந்தியத் துருப்புக்களின் வருகையின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களில் ஆயிரத்து 500 இந்திய வீரரும் 6 ஆயிரத்துக்கும் 7 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட இலங்கையரும் உயிரிழந்தனர்.

கலந்துரையாடல், சகிப்புத் தன்மை, சகோதரத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஆகியன மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று நம்புகின்றேன்.

யுத்தத்தை விட நேர்மையே சக்தி வாய்ந்தது என்பதை இந்தியப்படைகள் அமைதியாக வெளியேறியது எடுத்துக் காட்டுகிறது.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார். (இ-எ)

# ரஞ்சனின் உணவில் சயனைட் கலக்கத் திட்டம் தீட்டப்பட்டதாம்

## 7 இராணுவப் பொலீஸாரும், ஒரு பிக்குவும் கைது

கொழும்பு, மார்ச் 26

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை நஞ்சூட்டிக் கொல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலீஸைச் சேர்ந்த ஏழு பேரும் பிக்கு ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இராணுவப் பொலீஸாரில் ஒருவர் உத்தியோக வீடியோ படப்பிடிப்பாளராகப் பணியாற்றி வந்தார்.

இவருக்கும் ஜே.வி பி.இயக்கத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் உணவில் சயனைட் நஞ்சு கலப்பது அல்லது அமைச்சரைச் சுட்டுக் கொல்வது — இந்த வேலை மேற்படி வீடியோ படப்பிடிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஜே. வி. பி. அரசியல் குழு உறுப்பினரான சமன் பியசிறி பெர்னாண்டோ என்பவர் கைதானதைத் தொடர்ந்தே இச் சதி முயற்சி அம்பலமானது.

ஜே. வி. பி. இயக்கத் தலைவர் றோஹண விஜேவீரா இறப்பதற்கு முன்னர் வாக்கு மூலம் அளித்தார். அதனை வீடியோவில் படம்பிடித்தவர் இந்த இராணுவப் பொலீஸ் அதிகாரி தான் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த இராணுவப் பொலீஸ் அதிகாரி கடைசியாக வீடியோ படம் எடுத்த நிகழ்ச்சி, கொழும்பில் இயங்கிவந்த கூட்டுப் படையணி அமைப்பைக் கலைப்பது பற்றிய வைபவம் தான்

இந்த இராணுவப் பொலீஸ் அதிகாரிகள் குழுவுக்கு சயனைட் நஞ்சை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் பிக்கு ஒருவரும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார். (இ-எ)

# இந்தியாவுடன் ஆலோசித்தே பல பிரச்சினைகளுக்குத் தீர்வு!

## இ. தொ. கா பொன்விழாவில் ஜனாதிபதி தகவல்

கொழும்பு, மார்ச் 26

இந்தியாவுடன் ஆலோசித்தே பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டியிருக்கிறது.

— இவ்வாறு கூறினார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா.

ஹட்டனில் நடந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொன்விழா நிகழ்ச்சிகளில் நேற்றுக் காலை கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

1987 தொடக்கம் இந்தியாவுடனான நல்லுறவு பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று முன்தினம் (சனி) காலை இந்தப் பாதிப்பு முற்றாக நீங்கிவிட்டது.

நிபந்தனையற்ற விதத்தில் இந்திய அமைதிப் படையை இந்தியா வாபஸ் செய்திருக்கிறது. இது ஒரு முக்கிய அம்சமாகும்.

இந்தியாவுடன் கலந்தாலோசித்து பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டியுள்ளது.

பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான இந்திய அரசாங்கம் இலங்கையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கிறது.

இலங்கையின் இறைமை, ஐக்கியம் ஆகியவற்றை இந்தியா ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றும் அவற்றை அது பேணிப் பாதுகாக்கும் என்றும் இந்தியப் பிரதமர் அண்மையில் வெளியிட்ட கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்திய மண்ணில் இருந்து இலங்கை மீது தாக்குதல் நடத்த எந்தக் குழுவையும் அனுமதிக்க மாட்டோம் என்றும் இந்தியா கூ[illegible]

இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இலங்கை அரசின் பொறுப்பு என்று இந்தியா ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இன்னொரு நாட்டில் தலையிடுவது பிழையானது என்பதை இந்தியா செயல்முறையில் எடுத்துக் காட்டியுள்ளது.

எந்த ஒரு வெளிநாட்டு அரசின் வற்புறுத்தலுக்கும் இடங்கொடுக்காமல் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பேன் என்று நான் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

எவ்வாறாயினும் செயல்முறையில் எல்லா நாடுகளுடனும் நல்லுறவு பேணப்படும்.

இன்று முதல் இந்தியாவுடனான நட்புறவு மேலும் பலப்படுத்தப்படும்.

எந்த ஒரு நாட்டிடம் உதவி கோரப்பட்டாலும் அது சம அடிப்படையில் அமைந்திருக்கும்.

சகல தேசிய, உள்நாட்டுக் கொள்கைகளும் இந்த அடிப்படையில் அமைந்திருக்கும்.

எமது தேசிய மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் நீதியின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

எமது மக்களின் பெருமை - நீதியின் அடிப்படையில் அமையும்; இன மத, மொழி அடிப்படையில் அமைந்திருக்க மாட்டாது.

வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக மட்டும் இந்தக் கொள்கைகள் வகுக்கப்படவில்லை.

தனது மனச் சாட்சிக்கு மாறாக நடந்து கொள்வதற்கு எந்த ஒரு வல்லரசுக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

— இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

# இந்தியப்படை மீண்டும் நண்பர்களாக வரலாம்!

## பிரியாவிடையில் அமைச்சர் ரஞ்சன்

''நீங்கள் மீண்டும் வரலாம், ஆனால் விருந்தாளிகளாக!''

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, திருமலையில் இந்திய அமைதிப்படையின் கடைசி அணிக்கு பிரியாவிடை கூறும் போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

''நல்ல நண்பர்களாக உங்களை வரவேற்க எனது அரசு தயாராக இருக்கிறது''—

கப்பல் மேற்தளத்தில் நின்றபடி அமைதிப்படை வீரர்களிடம் அமைச்சர் விஜேரத்தினா இப்படித் தெரிவித்தாராம். (உ-எ)

# சட்டவிரோத மதுபான வேட்டை

குருநகர், மார்ச். 26

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நேற்றும், நேற்று முன்தினமும் (சனி—ஞாயிறு) நடத்தப்பட்ட தேடுதல்களில் சட்டவிரோத மதுபான விற்[illegible] கள், வடிசாராயம் என்பன [illegible] தமிழ் விடுதலைப் புலிகளின் குருநகர்ப் பொறுப்பாளர் அமலன் தலைமையில் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

[illegible] பற்றப்பட்ட மது வகைகள் பின்பு சேதமாக்கப்பட்டன. (இ-51)

# உடலினுள் தங்கப்பாளம் மறைத்து வைத்த ஆசாமி!

கொழும்பு, மார்ச் 26

சிங்கப்பூரில் இருந்து வந்த பாகிஸ்தான் பிரசை ஒருவரின் உடலிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் 13 தங்கப் பாளங்களைக் கைப்பற்றினர்.

விமான நிலையத்திலிருந்து வந்த அந்த நபரின் நடையில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவரை விசாரித்தனர். தன்னிடம் ஒன்றுமே இல்லை என்று அந்த நபர் வாதிட்டார்.

''மெட்டல் டிடெக்டர்'' கொண்டு சோதனையிட்ட போது அந்த நபரின் உடலில் ஏதோ ஓர் உலோகம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

அப்போதும் அந்த நபர் மறுத்தார். அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு அங்கு எக்ஸ்றே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்போதும் அந்த நபர் தன்னிடம் ஒன்றுமே இல்லை என்று மறுத்தார்.

பின்னர் ஒரு மணித்தியாலமாக சுங்க அதிகாரிகள் அந்நபரை விசாரித்தனர். பின்னர் தன்னிடம் 13 தங்கப் பாளங்கள் இருப்பதை ஒப்புக் கொண்டார்.

உடனே அருகில் இருந்த மலசலகூடத்துக்கு அவர் அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு தனது உடலினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 13 தங்கக் கட்டிகளை அவர் எடுத்து அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். (உ-எ)

# மாவட்டங்கள் தோறும் இராணுவ படை அணிகள்

கொழும்பு, மார்ச் 26

நாட்டின் ஒவ்வொருமாவட்டத்திலும்விரைவில்இராணுவ ''கண்டோன்மென்ட்களை'' படையணிகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தீவு முழுவதும் இராணுவத்தினரைப் பரவலாக வைத்திருப்பதன்மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசின் திட்டத்தின் ஓர் அங்கமாகவே மாவட்ட ரீதியிலான பிரிவுகள் அமைக்கப்படும்.

இதன்படி ஒவ்வொருமாவட்டத்திலும் ஒவ்வொரு படையணி இருக்கும் அவசர நேரங்களில்சட்டம், ஒழுங்கை பராமரிக்க பொலீஸாருக்கு உதவி செய்ய இவர்கள் அழைக்கப்படுவர்.

இலங்கை இராணுவப்படையின் பலம் தற்போது 50 ஆயிரம் வீரர்களாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## கடைசி அணி சென்னையை வந்தடைந்தது!

சென்னை, மார்ச் 26

நேற்று முன்தினம் திருமலையில் இருந்து புறப்பட்ட இந்திய அமைதிப் படையின் கடைசி அணி, நேற்றுக் காலை சென்னை வந்து சேர்ந்தது.

அமைதிப்படையினரை பாதுகாப்பு துணை அமைச்சர் பேராசிரியர் ராஜாராமண்ணாவும் மாநில ஆளுநர் பி. ஆர். அலெக்ஸாண்டரும் அங்கு வரவேற்றனர். (உ-எ)

## எய்ட்ஸ் பரிசோதனை

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் இரத்ததானம் செய்யும் அனைவரின் இரத்தமும் இனிமேல் எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்குட்படுத்தப்பட உள்ளது.

இத்தகவலை மேகநோய் தடுப்பு இயக்கப் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டார்.

## 11இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 26

புத்தளம் பகுதியில் நேற்று பதினொரு இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இக் கொலைகளுக்கு யார் காரணம் என்பது இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளியாகவில்லை (உ-எ)

## முல்லைத்தீவுக்கு காலை பஸ்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

காரைநகரிலிருந்து முல்லைத்தீவுக்கு அதிகாலையில் விசேட பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

காலை 4 05 மணிக்கு காரைநகரில் இருந்து புறப்படும் இந்த பஸ் சித்தங்கேணி வட்டுக்கோட்டை வழியாக காலை 5-15 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 5-30 மணிக்கு புறப்படும் இந்த பஸ் பரந்தன்,புதுக்குடியிருப்பு வழியாக முல்லைத்தீவுக்குச் செல்லும்.

## கரவெட்டி..,

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்கறுப்பு [J. 434] - ஜெயபவானந்தமலை, சுண்டிக்குளம் [J. 435] என். சிவசுப்பிரமணியம்.

## மரண அறிவித்தல்

### சண்முகவேல் கணேசானந்தன்

வட்டு - கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சண்முகவேல் கணேசானந்தன் 25-03-1990 ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமானார்.

இவர் கதிரவேலு சண்முகவேல், திருமதி பொன்மலர் அவர்களின் மூத்த மகனும், திருமதி க. திருமலர் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிற்றம்பலம், திருமதி சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மருமகனும், திரு நடேசானந்தன், திருமதி என். ஜீவமணி, செல்வி S. ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. P. S. K. நடேஸ்வரன் (சங்கானை விஞ்ஞானக் கல்வி நிலைய நிர்வாகி), திருமதி என். அமுதசுரபி, திரு. சி. தவச்செல்வம் (U.K), திருமதி புஷ்பாஞ்சலி, செல்வன் இராகவன் ஆகியோரின் மைத்துனரும், திருத்தணிகாசலம், திருமதி நிமலஜோதி ஆகியோரின் சகலனும், குணலதன், சங்கீதா, ஆரணி, அபிராமி ஆகியோரின் மாமனாரும், கிரிசாந்தன் அவர்களின் பெரியதந்தையும், வசந்தன், மேகலா, காயித்திரி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-03-1990 திங்கட் கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகவேல் நடேசானந்தன்

வட்டு - கிழக்கு,
வட்டுக்கோட்டை. [12136]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org